# ஆண்டவரின் இல்லம்தேடி

ஆண்டவரின் இல்லம்தேடி வருகிறோம்
ஆனந்தமாய் இறை மனிதம் ஆகிறோம் } 2
தாயின் கருவில் நம்மை தேர்ந்த தெய்வம் அழைக்கிறார் -2
அவரில் ஒரு குடும்பமாக கூடுவோம்
வருக வருக அன்பிலே எழுக எழுக அருகிலே
ஒன்றி வாழும் உள்ள உணர்விலே ஒன்று கலந்திடவே
ஆண்டவரின்…

இணைந்து வாழும் மனிதர் நடுவில் இறைவன் எழுகிறார்
இதயம் ஒன்றி வேண்டும் போது அருளை பொழிகிறார் } 2
இகம் வாழ்ந்திடும் உயிருக்கெல்லாம்  அருளை பொதுமை யாக்குவோம்
இனிமையான பணிகளாலே உலகை புதியதாக்குவோம்
இறைவன் ஆட்சி மலர வேண்டும் மண்ணிலே
இதயம் சேர்ந்து இனியகுடும்பமாகவே – 2

வருக வருக அன்பிலே எழுக எழுக அருகிலே
ஒன்றி வாழும் உள்ள உணர்விலே ஒன்று கலந்திடவே
ஆண்டவரின்…..

சிதறி வாழும் மனிதர் சேர கரங்கள் விரிக்கிறார்
சிதைந்து போன மனிதம் மீட்க உயிரைத்தருகிறார் } 2
உறவு தாகம் கொண்ட அவரின் உள்ளம் கொண்டு வாழுவோம்
உருவில்லாத அவரை மனித உறவுகளில் காணுவோம்
இறைவன் ஆட்சி மலர வேண்டும் மண்ணிலே
இதயம் சேர்ந்து இனிய குடும்பமாகவே –2

வருக வருக அன்பிலே எழுக எழுக அருகிலே
ஒன்றி வாழும் உள்ள உணர்விலே ஒன்று கலந்திடவே
ஆண்டவரின்…..